german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

giz

# வில்பத்து தேசிய பூங்கா

## தகவல் கையேடு



வெளியீடு:
வில்பத்து தேசிய பூங்கா மற்றும் Influence Zone Management நிகழ்ச்சித்திட்டம்

GIZ வதிவிட அலுவலகம் ஸ்ரீலங்கா
இல. 6, ஜாவத்தை அவெனியூ,
கொழும்பு 05

T +94 112 599713-6
F + 94 112 551525

E giz-srilanka@giz.de
I www.giz.de/srilanka

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம்
இல. 811A ஜயந்திபுர வீதி,
பத்தரமுல்ல

T +94 11 2 888 585
F + 94 11 2 883 355

I www.dwc.gov.lk

அனுசரணை: ஜேர்மனிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சு (BMZ)
திட்ட அமுலாக்கம்: வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், ஜேர்மன் அபிவிருத்தி கூட்டாண்மை (GIZ) மற்றும் GOPA ஆலோசகர்குழு

நூலாசிரியர்: GOPA / Dr. நிசாந்தி பெரேரா

வடிவமைப்பு: GIZ / அசங்க வர்ணகுலசூரிய

புகைப்பட உதவி: GIZ / டேனியல் ஷ்ரெய்பர், அச்ரப் காசிம்,
GOPA / Dr. நிசாந்தி பெரேரா, சொஹான் முனவீர

பதிப்புரிமை பூ 2018 ஜேர்மன் அபிவிருத்தி கூட்டாண்மை (GIZ) மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்தக் கையேடு அல்லது அதன் பகுதிகள் எழுத்து மூலமான அனுமதியின்றி பயன்படுத்தப்படவோ அல்லது மீளுருவாக்கம் செய்யப்படவோ கூடாது.



## வில்பத்து தேசிய பூங்கா விபரம்:

- பரப்பளவு: 131இ655 ஹெக்டேர்
- 1938 ஆம் ஆண்டிலிருந்து தேசிய பூங்கா அந்தஸ்தினைக் கொண்டுள்ளது
- 2013 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ராம்சார் ஈரநிலப் பிரதேசமாகக் கருதப்படுகிறது
- தனித்துவமான ஈரநில சுற்றுச்சூழலமைப்புகள்: 40 க்கும் அதிகமான
- "Big 3"எனப்படும் வனவிலங்குகள் காணக்கிடைக்கின்றமை: யானை, சிறுத்தை, தேன் கரடி (Sloth Bear)
- ஏராளமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் பண்டைய நீர்ப்பாசன அமைப்புகள் காணப்படுகின்றமை
- இரண்டு டிக்கெட் கவுண்டர்கள்: ஹூ னுவிலகம மற்றும் எளுவன்குளம்
- வேகக் கட்டுப்பாடு: 25km/h
- பார்வை நேரம்: மு.ப 6 மணி தொடக்கம் பி.ப 6 மணி வரை





131,656 ஹெக்டேர் பரப்பளவு உடைய வில்பத்து தேசிய பூங்கா (WNP) இலங்கையின் மிகப்பெரிய சரணாலயமாகக் கருதப்படுகிறது. இது வனஜீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்கு இணங்க 1938 ஆம் ஆண்டு தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன், 1938 முதல் 1973 வரையான காலப்பகுதியில் கெஸட் செய்யப்பட்டு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் 05 பகுதிகளை உள்ளடக்குகின்றது. புத்தளம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பரந்து காணப்படும் இந்த சரணாலயமானது, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை எல்லையாகக் கொண்டுள்ளது. அத்தோடு, வடக்கு எல்லையாக மோதரகம் ஆறு மற்றும் அருவி ஆறும், தெற்கு எல்லையாக கலா ஓயாவும், மேற்கு எல்லையாக போர்த்துக்கல் மற்றும் டச்சு விரிகுடாக்களை உள்ளடக்கிய இந்து சமுத்திரமும் காணப்படுகிறது. மேற்கு வில்பத்து சரணாலயம் மற்றும் 40,000 ஹெக்டேர் பரப்பளவு உடைய மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் வடக்கேயும், 21,933 ஹெக்டேர் பரப்பளவு உடைய தப்போவ சரணாலயம் தெற்கு எல்லையை அண்மித்தும் காணப்படுகிறது. இந்தப் பிரதேசமான-து, இலங்கையின் முக்கியமான யானைகள் வாழ்விடமாகக் கருதப்படுகிறது.

வறண்ட நிலக்காடுகள் மற்றும் முட்புதர்களை உள்ளடக்கிய தட்டையான நிலப்பிரதேசத்தில் அமைந்துள்ள வில்பத்து தேசிய பூங்காவில், ஆங்காங்கே திறந்த வெளிகளும் மணல் திட்டுக்களால் சூழ்ந்துள்ள 'வில்லு' என்றழைக்கப்படும் 40 க்கும் மேற்பட்ட பருவகால மற்றும் நிரந்தரமான ஏரிகளும் காணப்படுகின்றன. தட்டையான, மழை நீரைத் தேக்கி வைத்திருக்கும் ஆழம் குறைந்த இந்த ஏரிகள் பெரும்பாலும் ஊற்று நீர் மூலங்களைக் கொண்டிருப்பதில்லை.



வில்பத்து சரணாலயமானது "ஏரிகளின் நிலப் பகுதி" என்றும் பொதுவாக அழைக்கப்படுகிறது. 10 ஹெக்டேர் முதல் 160 ஹெக்டேர் வரையான பரப்பளவு உடைய இந்த வில்லு ஏரிகள், நன்னீர் (உ.ம். கும்புக் விலா), உவர்நீர் (உ.ம். களி வில்லு) அல்லது உப்பு நீரினைக் (கொக்கரி வில்லு) கொண்டுள்ளன. இந்த வில்லு ஏரிகள், வில்பத்து சரணாலயத்தின் மத்திய மற்றும் வடமேற்கு பகுதிகளில் அமைந்துள்ளதுடன், பல்வேறு வகையான விலங்குகள் மற்றும் தாவரங்களின் புகலிடமாகவும் திகழ்கிறது. 2013 ஆம் ஆண்டு வில்பத்து சரணாலயத்தின் அனைத்து பகுதிகளும், மேற்கு எல்லையிலுள்ள 10 கி.மீ வரையான கடல் பிராந்தியம் மற்றும் தீவுகளும், மகாவிலச்சிய குளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசமும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ராம்சார் சாசனத்தின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட ஈரநிலப் பிரதேசமாகக் பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுவான பண்புகள்

ஈரமான (பருவமழை) மற்றும் வறண்ட பருவங்கள் மாற்றமடையும் இலங்கையின் வறண்ட மற்றும் அரை வறள் வலய காலநிலையைக் கொண்டுள்ளது.

- கடல் மட்டத்திலிருந்து 240 மீற்றர் உயரமான நிலப்பகுதியில் அமைந்துள்ளது
- அண்ணளவான வருடாந்த மழைவீழ்ச்சி 1,000 மி.மீ
- மழைப் பருவம்: செப்டம்பர் முதல் டிசம்பர் வரை மற்றும் மார்ச் முதல் மே வரையான காலப்பகுதி
- வறண்ட பருவம்: ஜனவரி முதல் பெப்ரவரி வரை மற்றும் மே முதல் செப்படம்பர் வரையான காலப்பகுதி

## உயிர்ப் பல்வகைமை

வில்பத்து தேசிய பூங்காவின் ஏறத்தாழ 70% ஆன பகுதியானது மண் வகையினைப் பொறுத்து மாறுபட்ட உயரங்களைக் கொண்ட வறண்ட வலயக் காடுகள் மற்றும் முட்புதர்களால் சூழப்பட்டுள்ளது. வில்லு ஏரிகளை அண்மித்த பகுதிகளில் சிறிய புல்வெளிகள் காணப்படுகின்றன. மொத்தமாக 621 தாவர வகைகள் வில்பத்துவில் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் வானளவு உயர்ந்து நிற்கும் பாலை மரங்கள் (Manilkara hexandra) குறிப்பிடத்தக்கவை. 2000 ஆண்டுகள் பழமையான பருவகால மற்றும் நிரந்தரமான ஏரிகளும் குளங்களுக்கு மேலதிகமாக கடலோரத்தை அண்டிய பிரதேசத்தில் சதுப்பு நிலங்களும் பற்றைக்காடுகளும் காணப்படுகின்றன. அத்தோடு, கலா ஓயா களப்பு பகுதியில் இலங்கையின் மிகப்பெரிய சதுப்புநிலக் காடுகள் காணப்படுகின்றன. இந்த ஆழம்குறைந்த கடற்பரப்பானது பாரம்பரிய முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவதுடன், கடல்பாசி படுக்கைகள் அருகி வரும் உயிரினங்களான கடல் பசுக்களின் (Dugong) வாழ்விடமாக கடல்பாசி படுக்கைகள் திகழ்கின்றன.

வில்பத்து தேசிய பூங்கா மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் பல வகையான விலங்குகளின் புகலிடமாகத் திகழ்கிறது:

- 23 நன்னீர் மீன் வகைகள்
- 17 நில நீர்வாழ் உயிரினங்கள்
- 57 ஊர்வன வகையைச் சேர்ந்த உயிரினங்கள்
- 253 பறவைகள்
- 45 பாலூட்டி விலங்குகள்







வில்பத்து சரணாலயமானது உலகளவில் அருகி வரும் உயிரினங்களான: சிறுத்தை (Panthera pardus kotiya) தேன் கரடி (Melursus ursinus) மற்றும் யானைகளின் (Elephas maximus maximus) புகலிடமாகத் திகழ்கின்றன. அத்தோடு, கூட்டமாக மேயும் புள்ளிமான்களையும் (Axis axis) சதுப்புநில முதலைகளையும் (Crcodylus palustris) சரணாலயத்தில் காணமுடிகிறது. ஆழம்குறைந்த கடல் படுக்கைகளில், அருகி வரும் உயிரினமான கடல் பசுக்கள் (Dugong dugon) இந்தோ-பசிபிக் ஹம்ப்பேக் டொல்பின்கள் (Sousa chinensis) மற்றும் கடல் ஆமைகளைக் காணமுடிகிறது. (ஒலிவர் ரிட்லி - Lepidochelys olivaceae மற்றும் பச்சை கடல் ஆமைகள் (Chelonia mydas)

இலங்கைக்கு உரித்தான பின்வரும் பறவைகள் வில்பத்து தேசிய பூங்கா மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் அடையாளங்காணப்பட்டுள்ளன: இலங்கைக் காட்டுக்கோழி (Gallus lafayetti) இலங்கை பச்சைநிற புறா (Treron pompadora) சாம்பல் நிற இருவாச்சி (Ocyceros gingalensis) கறுப்பு நிற கொண்டைக்குருவி (ycnonotus melanicterus) பழுப்பு நிற சிலம்பன்குருவி (Pellorneum fuscocappilum) இலங்கை தொங்கும் கிளி (Loriculus beryllinus) சிறிய இலங்கை குக்குறுப்பான் (Megalaima rubricapillus) பொன்முதுகு மரங்கொத்தி (Chrysocolaptes stricklandi) இலங்கை தகைவிலான்குருவி (Hirundo hyperythra) மற்றும் இலங்கை காட்டுக்கீச்சான் (Tephrodornis affinis).



## வரலாற்று மற்றும் கலாசார பின்னணி

சரணாலயத்தினை சூழவுள்ள பிரதேசங்களில் காணப்படும் பண்டைய கால குளங்கள், பௌத்த மடாலயங்கள், தூபிகள் மற்றும் கல்வெட்டுக்கள், குறித்த பிரதேசத்தில் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்திற்கு சான்று பகர்கின்றன. குறிப்பாக, கி.மு 500 இல் விஜய மன்னன் தரையிறங்கியதாகக் கூறப்படும் 'தம்மன்ன நுவர' என்ற இடம் வில்பத்து தேசிய பூங்காவின் குதிரைமலை முனை மற்றும் மோதரகம் ஆறு ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படுகிறது. மரதன்மடுவ குளத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள 'கல்பெந்தி நீராவிய' என்ற இடத்தில் 2000 வருடங்களுக்கு முன்னர் துட்டகைமுனு மன்னனின் மகனான சாலிய இளவரசன், தனது துணைவியான அசோகமாலாவுடன் வசித்ததாகக் கூறப்படுகிறது. அத்தோடு, பேலியோதிக் மற்றும் மெசோலிதிக் காலப்பகுதியிலான வரலாற்றுக்கு முந்தைய புராதன இடங்கள் தொடர்பான ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இலங்கையில் நிலவி வந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏறத்தாழ 20 வருடங்களாக மூடப்பட்டிருந்த வில்பத்து சரணாலயமானது, 2009 மே மாதம் யுத்தம் நிறைவடைந்ததையடுத்து, 27 பெப்ரவரி 2010 அன்று பொதுமக்களுக்காக மீளவும் திறக்கப்பட்டது. யுத்த களத்தின் முன்னரங்கு நிலைகள் சரணாலயத்தினை அண்டிய பிரதேசங்களில் நிறுவப்பட்டிருந்தமையால், அதன் பராமரிப்பு செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதுடன், பெருமளவான உயிரினங்களும் அழிவடைந்தன. எனினும், யுத்தம் முடிவடைந்ததையடுத்து சரணாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்பட்டதுடன், விலங்குகள் மீளவும் தங்களது வாழ்விடங்களுக்கு திரும்பி வருகின்றன.

135 கிராமங்களைச் சேர்ந்த அண்ணளவாக 34,000 பொதுமக்கள் சரணாலயத்தினை அண்டிய பகுதிகளில் வசித்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் கரையோர மீன்பிடித்தல், வடக்கு மற்றும் தெற்கு எல்லையில் கால்நடை வளர்ப்பு மற்றும் மழையை ஆதாரமாகக் கொண்ட விவசாயம் ஆகியவற்றை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். பயிர் வகைகளை விலங்கினங்கள் உட்கொள்வது போன்ற நிலைமைகளால், சரணாலயத்திற்கு அருகில் வசிப்பது சவாலாக விளங்கும் போதிலும், சுற்றுலாத்துறை மற்றும் அதுசார்ந்த நடவடிக்கைகளில் அதிகளவான வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. உள்ளூர் மக்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் வாயிலாக மேற்கூறிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிகிறது.



## சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல்கள்

சரணாலயத்தினுள் சுற்றுலாப்பயணிகளை அனுமதிக்கும் முகமாக ஹூனுவிலகம (அநுராதபுரம்) மற்றும் எளுவன்குளம் (புத்தளம்) ஆகிய நுழைவாயில்களில் இரண்டு டிக்கெட் அல்லது பெர்மிட் கவுண்டர்கள் நிறுவப்பட்டுள்ளன. தினமும் மு.ப 6 மணி தொடக்கம் பி.ப 6 மணி வரை சரணாலயமானது திறந்திருப்பதுடன், சீரற்ற காலநிலையின் போது இந்த நேரங்களில் மாற்றங்கள் இடம்பெறக்கூடும். நான்கு சக்கர வாகனங்கள் மாத்திரமே சரணாலயத்தினுள் அனுமதிக்கப்படுவதுடன் அவை கண்டிப்பாக 25km/h வேகக் கட்டுப்பாட்டினைப் பேண வேண்டும். கும்புக் விலா மற்றும் குதிரைமலை முனை ஆகிய இடங்களில் மாத்திரம் சுற்றுலாப்பயணிகள் வாகனங்களிலிருந்து இறங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. ஹூனுவிலகம நுழைவாயிலில் நூதனசாலையொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

சரணாலயத்திலுள்ள 07 சுற்று பங்களாக்களில் தலா 10 நபர்கள் வீதம் தங்குவதற்கு முடிவதுடன், 50 நபர்கள் தங்கக்கூடிய ஓய்விடமொன்றும் காணப்படுகிறது. அத்தோடு, சுற்றுலாப் பயணிகள் கூடாரம் அமைத்து தங்குவதற்கான பிரத்தியேகமான பகுதிகளும் காணப்படுகின்றன. சுற்று பங்களாக்கள், ஓய்விடம் மற்றும் கூடாரம் அமைப்பதற்கான பிரத்தியேகமான பகுதிகளில் தங்குவதற்கு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் e-service வாயிலாக அல்லது நேரடியாக முன்பதிவுசெய்ய வேண்டும்.

சரணாலயத்தின் பிரதான நுழைவாயிலில் இருந்து 10 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன. அத்தோடு, சரணாலயத்திலிருந்து முறையே 25 மற்றும் 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அநுராதபுரம் மற்றும் கல்பிட்டிய நகரங்களை அண்டிய பகுதிகளிலும் ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் காணப்படுகின்றன



## வில்பத்து தேசிய பூங்காவினுள் நுழையும் சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல்கள்

- சரணாலயத்திலுள்ள விலங்குகளுக்கு உணவுப் பொருட்களை வழங்கவோ சரணாலயத்திலிருந்து ஏதேனும் பொருட்களையோ எடுத்துச் செல்ல வேண்டாம் (தாவரங்கள், எலும்புகள், கற்கள் முதலியவை)
- விலங்குகளை அவதானிக்கும் போது அமைதியைப் பேணவும்
- வாகனங்களை விட்டு அகலவோ, யன்னல் மற்றும் கூரைகளில் ஏறவோ வேண்டாம்
- கும்புக் விலா மற்றும் குதிரைமலை முனை ஆகிய இடங்களில் மாத்திரம் வாகனங்களிலிருந்து இறங்கவும்
- வாகனங்களிலிருந்து குப்பை கூழங்களை வீசுவதைத் தவிர்க்கவும். தயவுசெய்து அவற்றை உங்களுடன் எடுத்துச்செல்லவும்
- சரணாலயத்தினுள் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது
- நான்கு சக்கர வாகனங்கள் மாத்திரமே சரணாலயத்தினுள் அனுமதிக்கப்படுவதுடன் கண்டிப்பாக 25km/h வேகக் கட்டுப்பாட்டினைப் பேணவும்.
- மெதுவாக வாகனத்தினை செலுத்துவதன் மூலம் சிறிய பறவைகள், ஊர்வன மற்றும் பாலூட்டி உயிரினங்களை அவதானிக்க முடியும்
- வாகன சாரதி ஏனைய வாகனங்களை வழிமறித்தல் அல்லது விலங்குகளின் நடமாட்டத்திற்கு இடையூறு விளைவிக்கும் முகமாக நடந்துகொள்வதைத் தவிர்க்கவும்



## வரைபடம்



